12 வது பதினெண் சித்தர் பீடாதிபதி 11 வது பதினெண் சித்தர் பீடாதிபதி



இந்து மதத் தந்தை
குருமகா சன்னிதானம்
ஞாலகுரு சித்தர் கருவூரார்

மெய்ஞ்ஞானக்கொடி

தஞ்சைப் பெரிய
கோவிலைக்கட்டிய சித்தர்
காவிரியாற்றங்கரைக் கருவூரார்

# குருதேவர்

(காணிக்கை ரூ. 1-00)

இந்து மறுமலர்ச்சி இயக்க அறிக்கை
(உறுப்பினர்களுக்கு மட்டும்) இ. ம. இ. பதிவு எண். 135/83

## அரச பாரம்பரியம்

கி. பி. 785 இல் முதலாம் விசயாலனை தமிழின் அருட்பேரரசின் முதல் மன்னனாக முடிசூட்டிய காலத்தில் 11 வது பதினெண் சித்தர் பீடாதிபதி குருமகா சன்னிதானம் சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரார் அவர்கள் அவனுக்களித்த அரச பாரம்பரியத்திலிருந்து சில வாசகங்கள்.

1. தமிழ் நாடு இளமுறியா கண்டத்தின் காலத்திலிருந்து எண்ணற்ற சிற்றரசர்களையும் பேரரசர்களையும் சிற்றூர் மன்னர்களையும் பேரூர் மன்னர்களையும் ஆற்றல்மிக்க அரசர்களையும், காவலர்களையும் வேந்தர்களையும் பெற்றிருந்திருக்கிறது எனவே பாரம்பரிய உரிமைகளையும் பெருமைகளையும் பேசி கோழைகளாகவும் குழப்பவாதிகளாகவும் வாழ்பவர்களே மிகுதியாக இருக்கிறார்கள். இவர்களையெல்லாம் புரிந்து, உணர்ந்து, தெளிந்து செயல்பட்டால்தான் நாடு தழுவிய பட்டாளத்தையும் படையையும் சேனையையும் திரட்டி புதிய அரசை அமைக்கமுடியும்.

2. தமிழ் நாட்டில் பல்வேறு மொழியினரும் பெரிய நகரம் முதல் சிறிய பட்டி தொட்டி கிராமம் வரை ஊடுருவல் செய்து வலிமையான வளமான செல்வாக்கான வாழ்க்கை வாழுகிறார்கள். இவர்கள் என்றைக்கும் தமிழின ஒற்றுமையோ தமிழினப்

தொடர்ச்சி 12-ம் பக்கம்

# பதினெண் சித்தர்களின்
# தன்வந்திரி தரும் பாரதக் காட்சிகள்

## தன்வந்திரி தரும் திகைப்பு மிகு பேருண்மைகள்.
## சாபங்களால் தான் கண்ணன் சாதாரண மனிதனாக மாண்டான்.

1. அந்தணர் வேடத்தில் வந்த கண்ணனுக்கு கர்ணன் தன்னுடைய அறச்சக்திகள் அனைத்தையும் நன்கொடையாக வழங்கிய பிறகு; புன்முறுவல் பூத்தபடி "...... கண்ணா! நான் வழங்குபவை புதுவெள்ளம். இது, ஏற்கனவே உள்ள தண்ணீரையும் அடித்துச் சென்றுவிடும்; பிறகு உடைப்பேற்பட்ட ஏரி ஈரப் பசையே இல்லாமல் வெடித்து சிதறிக் கிடப்பது போல்! சாதாரண மனிதனாகச் சிதறுண்டு போகும் நிலைதான் உனக்கு முடிவு; என்று முனகிச் சாபமிடுகிறான் இது பலித்தது..." எனவே, மன நிறைவும் செயல் வெற்றியும் பிறரை உய்விக்கும் தூய்மைமிகு வாய்மையும் உண்மையான பத்தியும் உடையவர்கள் சாபமிட்டால் கடவுளாகவே தோன்றியவர்களும் பாதிக்கப்படுவர் என்பதையுணர்ந்து பிறரிடம் சபாம் பெறாமல் வாங்கக் கற்றுக் கொள்ளவேண்டும்

2. காந்தாரியின் கடுங்கோபத்தால் "...... ஏ மாயக் கண்ணா! சதிகாரா! இரக்கமற்ற அரக்கனே! என மக்கள் அழிந்தது போல் உன் மக்கள் அழிவார்கள்; உன் பிணம் கூட வெந்து சாம்பலாகாது......" என்று சாபமிட்டது பலித்தது. எனவே, கடவுளோ கடவுளின் பதிலியோ, தோற்றமோ யாராக இருந்தாலும் சரி பிறரின் சாபத்தைத்தேடிக் கொள்ளக் கூடாது.

3. கண்ணனுடைய அறிவுரைப்படி அருச்சுனன் பதினான்காம் நாள் போரில் தன் மகனைக் கொன்ற சீயரதனுடைய (சிங்கம் போன்ற இரதத்தையுடையவன்) தலையை அவனுடைய தந்தையாகிய வித்தைச் சித்திரன் (விருத்தாத்ச் சித்திரன் - பாட வேறுபாடு) மடியில் கொண்டுபோய் ஒரு பறவையின் மெல்லிய இறகு போல் தன் அம்பால் விழுமாறு செய்தான் வித்தைச் சித்திரனும் கண்மூடி ஆழ்ந்த தவத்தில் இருந்ததால்; தன் மடி மீதுவந்து மெல்லிய இறகுபோல் இறங்கிய பொருள் தனது மகன் சீயரதனுடைய தலை என்று தெரியாமலேயே கண் மூடிய நிலையிலேயே அதைத் தள்ளிவிட்டார். அதனால், அவர் பெற்றிருந்த வரத்தின்படி தனது மகனின் தலையை மண்ணில் வீழ்த்தியதால் தானே சிதறுண்டு அழிந்தார்.

இந்த செய்தியைக் கேட்ட அவர் மனைவி அத்ரி மகள் சித்திரை கண்ணனுக்குச்சாபம் கொடுத்தாள்........ "என் கணவனையும் மகனையும் ஒரே அம்பில் கொன்ற சூழ்ச்சிக்காரக் கண்ணா! காண்டீபத்திலிருந்து வந்த பெருமைக்குரிய அம்பு போல் அல்லாமல்; சாதாரண வேடனின் கொலைகார அம்பினால் நீ சாவாயாகுக......" என்று சாபமிட்டாள். அச்சாபம் பலித்தது எனவே, பிறரின் சாபத்தைப் பெறாமல் வாழக் கற்றுக்கொள்ள வேண்டும்.

4. அருச்சுனனின் மனைவியும் அபிமன்யுவின் தாயும் கண்ணனின் சகோதரியுமான சுபத்ரை தனது மகன் அபிமன்யு துரோணாச்சாரியாரின் தாமரை வியூகத்தை கண்ணனின் சூழ்ச்சியால்தான்; முழுமையாக வென்று திரும்பிடக் கற்றுக் கொள்ள முடியாது மாள நேரிட்டது என வருந்தி; "......என் மகனின் அழிவுக்குக் காரணமாக இருந்த முக்காலமும் உணர்ந்த மாயக் கண்ணன் உறங்குவதற்குக் கூடத் தரையில் இடமில்லாமல் பறவைகள் போல் மரக்கிளைகளில் உறங்கித் துன்புற்று மாளட்டும்..." என்று சாபமிட்டது பலித்து விட்டதால் பிறரின் சாபம் பெறாமல் வாழ எல்லோரும் கற்றுக்கொள்ளவேண்டும்.

இப்படித் தன்வந்திரி, சந்திர குலத்தில் உதித்த நவநாத சித்தர் தகுதி பெற்ற கடவுளின் தோற்றமான மாயக் கண்ணனுக்கே சாபங்கள் பாதித்ததைப் பற்றிக் குறிப்பிடும் குறிப்புக்கள் பதினெண் சித்தர்கள் படைத்த இந்துமதம் ஓர் உண்மையான பகுத்தறிவு மதம் என்று குறிக்கிறது. ஆதாரம்- கண்டப்பக்கோட்டைச் சித்தர் [illegible]பட்டியார் உ. இராமசாமிப் பிள்ளை எழுதியது.

# குருதேவர்

[இயக்க அறிக்கை]



சொல்லடி நாயனர்
பெரியார் ஈ. வெ. ரா.



போத்தர் மோகன்தாசு
கரம்சந்த் காந்தி



நவநாத் சித்தர்
காரல்மார்க்சு



ஞானசித்தர்
ஆதி சங்கரர்

## வணக்கவுரை !

பதினெண் சித்தர்களின் 'தன்வந்திரி' கூறும் 'பாரதக் காட்சிகளை' இவ்விதழ் முதல் தொடர்ந்து வழங்குகின்றோம். தன்வந்திரி துவாபரயுகத்தில் அரசு மருத்துவராகப் பணியாற்றியவர் அவர் தனது குறிப்புகளில் ஒவ்வொரு பாரதக் கால நாயகர்களையும் விமரிசனம் செய்துள்ளார். அக் குருபாரம்பரிய வாசகங்களை வழங்கியுள்ளோம்.

'அரச பாரம்பரியம்' — இன்றைய நமது நாடு எப்படி அன்னிய மொழியால், அன்னிய நாகரீகத்தால், அன்னிய உணர்வால், அன்னியர்களால் தாக்குண்டு சீர்குலைந்து காணப்படுகின்றதோ அவ்வாறேதான் பிற்காலச் சோழப் பேரரசின் துவக்க காலத்தில் தமிழகமும் தமிழ்ப்பண்பாடும் சோனகர், யவனர், சீனர்......... இவர்களின் வருகையால் நிலைகுலைந்து காணப்பட்டது அப்போது தோன்றிய சோழ மன்னனுக்கு கருவூரர் வழங்கிய அறிவுரை நூல் தான் அரசபாரம்பரியம். அது இன்றும் நம்முடைய நாட்டிற்கு மிகவும் பொருந்தும் என உரைத்து இதை மீண்டும் மீண்டும் படித்து புரிந்து உணர்ந்து ஒற்றுமையோடு தமிழின மறுமலர்ச்சிக்காகப் போராடுவோமாக !

—சி. கவிக்குமார்

அறிக்கை: 11 வெளியீடு: 26-10-84

இ. ம. இ. பதிவு எண் 135/83

[பண்பாட்டுக் கழகம்]

ஆசிரியர் குழு:

இ. ம. இ; அ. வி. தி; க. வ. க; அ. ஆ. க; உ. ம. ஆ. கு. முதலியவற்றின் வட்டாரத் தலைவர்கள்.

தொடர்பு :

1. பரமாச்சாரியார், நெ. சேவுகன்
   C/o. காதிவசுத்திராலயம்
   கொட்டாம்பட்டி [PO] 625 103

2. பிறமாச்சாரியார்,
   சி. கவிக்குமார் B.Sc.,
   56, N.G.O. காலனி
   பொன்னேரி-601 204.

3. தெய்விகாச்சாரியார்,
   சே. இரவீந்திரன்
   C/o சித்தர்
   E S I செம்பியம், பெரம்பூர்,
   சென்னை-600011.

## உண்மையான இந்து மத உயர்ச்சிக்காக வட ஆரிய வேத நெறிக்கு கண்டிப்பு (தொடர்ச்சி)

மறுமலர்ச்சிச் சிந்தனையாளர்கள், பகுத்தறிவுவாதிகள், விஞ்ஞானிகள், புதுமை விரும்பிகள், ஆராய்ச்சியாளர்கள், இக்கொள்கைதான் பதினெண் சித்தர்களின் 'சத்தி பூசை' களான ஏந்தரீக, தாந்தரீக, மாந்தரீகப்பூசைகளுக்குஅடிப்படை. ஆனால் இவை உலகியலோடு ஒத்துவரவில்லை. எனவேதான், 'எந்தப் பெண் காயந்திரி மந்தரத்தை' ஓதி எந்தத் தெய்வத்தை மனதில் நினைத்து வழிபட்டு வருகின்றாளோ அந்தத் தெய்வமாகவே மாறிவிடுகின்றாள்' என்று மிகத் தெளிவாகவே பதினெண் சித்தர்கள் குறிக்கின்றனர். இக்கருத்தைப் பின்பற்றாத மடமைவாதிகளாக, பிற்போக்காளர்களாக விளங்கி வரும் வடஆரியவேத நெறியினரை இ. ம. இ கடுமையாகக் கண்டிக்கின்றது.

9. எனவே, காயந்திரி மந்தரத்தை இனிமேலாவது அனைவரும் அறிந்து பயின்று, பயன்படுத்தி, அநுபவித்துப் புரிந்து நன்மையடையும்படிச் செய்ய வேண்டும். அதுதான் இந்துமதத்தை மறுமலர்ச்சி பெறச்செய்யும். தனிமனிதர்களைப் பக்குவப்படுத்திக் குடும்ப வாழ்வு, சமுதாய வாழ்வு, அரசியல் வாழ்வு.........முதலிய அனைத்தையும் வளப்படுத்தி, வலிமைப்படுத்தி பொலிவு பெறச் செய்யும் ஆற்றல் 'காயந்திரி மந்தரத்துக்கே' உண்டு.

10. இவ்வாறு மிகத் தெளிவாகப் பதினெண் சித்தர்கள் 'காயந்திரி மந்தரத்தைப்' பற்றிக் கூறியிருக்கின்றனர். இதைப் பல மாதங்களுக்கு முன்பே இவ்வறிக்கையின்மூலம் வெளியிட்டு பலருக்கும்; பல முன்னணி செய்தியேடுகளுக்கும் அனுப்பியிருந்தபோதிலும், வடஆரியவேத நெறியினர் சமீபகாலமாக பல செய்தியேடுகளில் காயந்திரி மந்தரத்துக்குத் தவறான விளக்கமும், பூசை முறைகளும் வெளியிட்டு வருகின்றனர். இதற்கெல்லாம் முடி சூடும் வண்ணமாக 'காயந்திரி' என்ற பெண் தெய்வம் ஒன்று உள்ளதென்றும் அதற்கு கோயில் கட்டப்பட்டதாகவும் தொடர்ந்து பல மணி நேரம் யாகம் நடத்தி அந்த யாகத்தில் காயந்திரி மந்தரம் கூறியதாகவும் செய்திகள் வெளிவந்துள்ளன.

இதனைப் பார்க்கும்போது வடஆரிய வேத நெறியினர் எவ்வளவு தூரம் தவறான பாதைக்கு மக்களை அழைத்துச் செல்கின்றனர் எனபது தெளிவாகின்றது.

பதினெண் சித்தர்கள் காயந்திரி மந்தரத்தை தனி மனித நலனுக்காகப் படைத்தனரே அன்றி அதற்காக உருவ வழிபாடோ, வழிபடு நிலையினரையோ, வழிபாட்டிடமோ, குறிப்பிட்ட கடவுளையோ, குறிப்பிட்ட வழிபடுநிலையத்தையோ பலரும் சேர்ந்து செய்யும் யாக முறைகளையோ உருவாக்கவே இல்லை! இல்லை!! இல்லை!!! இல்லவே இல்லை. காயந்திரி மந்தரத்துக் கென்று யாகம் செய்வது என்பது பெரிய ஏமாற்று வேலையே! இருந்தும் வடஆரியர்கள் கற்பனையான போக்கில் மிதமிஞ்சிய அறிவற்ற போக்கில் தனி மனித மந்தரங்களை யாகத்தில் பயன்படுத்திவருகின்றனர். இது மிகவும் விந்தைக்கும், வியப்புக்கும். வேதனைக்கும், ஏமாற்றத்துக்கும், உரியனவாக உள்ளதோடு; அவர்களின் அருளுலக அறியாமையையும், பூசை நெறிகளில் அரைகுறை வேக்காட்டுத் தன்மையையும் வெட்டவெளிச்சமாக்குகின்றது.

இப்படிப்பட்ட குருட்டுத் தனத்தால் தான் இந்துமதம் கேலிக்கும், கிண்டலுக்கும், மறுப்புக்கும், வெறுப்புக்கும, ஏளனத்துக்கும், நகைச்சுவைக்கும்......உள்ளாகி நலிந்தும், மெலிந்தும் வருகின்றது. எனவே இ ம இ. நேரடியாக இப் போக்கினை வளர்த்து வரும் வடஆரிய வேத நெறியினரை இக்கட்டுரையின் வாயிலாகக் கடுமையாகக் கண்டிக்கின்றது. 'திருந்துவதற்கும், திருத்துவதற்கும் வாய்ப்பினை நல்குகின்றது

—முற்றும்

# புது ஆத்திகனுக்கு நாத்திகனின் விளக்கவுரை

(தொடர்ச்சி)

(II) ஆலயம் என்பது பதினெண் சித்தர்கள் படைத்த 48 வகையான வழிபாட்டு நிலையங்களுள் ஒன்றேயாகும். வெளிப்பட மக்களுக்குத் தெரிந்திருப்பவை வழிபாடு செய்வதற்கு ஆலயம், கும்பிடுவதற்கு கோயில் என்ற இரண்டேயாகும். மற்றவைகள் குருவழி அறியத்தக்கனவாகவே இருக்கின்றன வழிபாட்டு நிலையங்கள் மட்டுமே 1. அமளிகை 2. அம்பலம் 3. அரங்கம் 4. ஆலயம் 5. இருக்கை 6. ஈச்சுரம் 7 உண்டாட்டகம் 8. ஏட்டகம் 9. கந்தழி 10. களத்துமேடு 11. கற்றளி 12. குடிசைக்கோயில் 13 கொடிநிலை 14. கோட்டம் 15. கோயில் 16. சபை 17. சாத்திறம் 18. சன்னிதானம்......என்று பட்டியலிட்டு 48-ம் கூறுவது மரபாக இருக்கிறது. இந்த நாற்பத்தெட்டிற்கும் வெவ்வேறு வகையான வழிபாட்டு முறைகள், பலிபொருள்கள், படையல்கள், இசைக் கருவிகள்......தனித்தனியாக நுட்பமான ஆனல் திட்பமான வேறுபாடுகளுடன் படைக்கப்பட்டுள்ளன பதினெண் சித்தர்களால். இதனல்தான், ''பதினெண் சித்தர்கள் இந்துமதம் என்கிற ஞானத்தை அகஞானமாக, புறஞானமாக மக்களுக்கு வழங்கியுள்ளார்கள்; இது தனிமனிதவாழ்வு குடும்ப வாழ்வு, சமுதாய வாழ்வு, அரசியல் வாழ்வு என்ற நான்கினையும் வளப்படுத்தி, வலிமைப்படுத்தி, என்றென்றும் நலமாகக் காத்திடும் மெய்ஞ்ஞானமாக, விஞ்ஞானமாக, சமூகஞானமாக இருக்கின்றது'' என்று பதினெண் சித்தர்கள் எழுதிவரும் 'குருபாரம்பரியம்' குறிக்கிறது இவை போன்ற எண்ணற்ற செய்திகளை இ. ம. இ. யும் அதன் அமைப்புக்களும் பல எண்ணற்ற இளைஞர்களுக்கு ஏட்டறிவாகவும், பட்டறிவாகவும் வழங்கித் தயாரித்து வைத்திருக்கின்ற இன்றைய நாளில் மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் இளையதலைமுறையினருக்கு ஏதும் தெரியாது எனக்கூறியிருப்பது கண்டு வருந்துகின்ருேம். வேதனைப்படுகின்ருேம்.

II 'குடமுழுக்கு என்ருலே தெரியாத தலைமுறை; ஆர். எம் வீரப்பன் வேதனை' -என்ற தலைப்பைக் கண்டு இ. ம. இ. யையும் இதனைச் சார்ந்த அமைப்புக்களையும் சேர்ந்த இளைஞர்களும், ஆதரவாளர்களும் ஆர்வலர்களும், விருப்பாளர்களும் மிகமிக வேதனைப்படுகிருர்கள்! வேதனைப்படுகிருர்கள்! வேதனைப்படுகிருர்கள்! என்பதனை மிக மிக வருத்தத்துடன் மாண்புமிகு அமைச்சருக்குத்தெரிவித்துக்கொள்கிருேம்.

எங்களுடைய உறுப்பினர்களுக்கு மட்டும் சுற்றறிக்கையாக அச்சிட்டு வெளியிடப்படும் ''குருதேவர்'' ஏடு, அறிக்கை எண்: 4 (வெளியிடு 26-4-84) நான்காம் பக்கத்தில் 'குடமுழக்கு விழாவில் குருட்டுத்தனம்' என்ற பெயரில் கட்டுரை வெளியிட்டிருக்கிருேம் இதுபோல் அச்சிடாத எண்ணற்ற கட்டுரைகள், அஞ்சல்கள், செயல்விளக்கக் குறிப்புகள், நேரடிச்சொற்பொழிவுகள், உரையாடல்கள்.........முதலியவற்றின் மூலம் எங்களது 'ஞானத்தந்தை, குருதேவர், தலைவர், அரசயோகி, அண்டபேரண்ட ஆதி சத்திகள் சன்னிதானம், இராசிவட்ட நிறைவுடையார், பன்னிரண்டாவது பதினெண் சித்தர் பீடாதிபதி, குருமகா சன்னிதானம், 'ஞாலகுரு சித்தர் கருவூரார், இந்துமதத் தந்தை' இன்றைய இந்துமத இளைஞர்களை உண்மையான இந்துமத அறிவில், கலையில், தத்துவத்தில் ......பேரறிவு படைத்தவர்களாக வளர்த்துள்ளார் என்பதை பொறுப்போடும் பொறுமையோடும் தெரிவித்துக் கொள்கின்ருேம்.

தவருனக் கருத்து: பன்னிரண்டாண்டுகளுக்கு ஒரு முறைதான் குடமுழுக்கு செய்யவேண்டும் என்று அமைச்சர் கூறியிருப்பது தவருன கருத்தாகும். வழிபாட்டு நிலையக் கருவறை அருளாளர்களைப் புதைக்கப்பட்ட சமாதியா? எரிந்த சாம்பல் மீது கட்டப்பட்ட பீடமா? வழிபட்ட பொருள்களை அடிப்படையாகக் கொண்டதா?

வழிபாட்டுக்காக மாந்தரீக, தாந்தரீக, ஏந்தரீக முறையில்கட்டப்பட்டதா? அல்லது எல்லா, ஈசா, இறை இயவுள், கந்தழி, கொடிநிலே, வள்ளி, கடவுள், தெய்வம், ஆண்டவர், பட்டவர், பரம்பொருள், ஏகப்பொருள், அனேகப்பொருள், ஓமப்பொருள் ஒகப்பொருள், யாகப்பொருள், யக்ஞப்பொருள், வேள்விப்பொருள், தவப்பொருள் ஞானப்பொருள், தேவியர், தேவதைகள், தேவர்கள், வானவர்கள், விண்ணவர்கள், அண்டத்தவர்கள், பேரண்டத்தவர்கள், அமரர்கள், இருடிகள், முனிவர்கள், கணங்கள் கணபாடிகள்......எனப்படும். பல வகையினர்களில் யாருக்குரிய கருவறை? ......என்றவினுக்களுக்கெல்லாம் பதினெண் சித்தர்களின் முறையில் ஆய்வுகள் நிகழ்த்தி உரிய விளக்கங்களேக் கண்டுதான் குடமுழுக்குச் செய்யவேண்டும்

'அதாவது மேற்படி உண்மைகளுக்கேற்பத்தான் குடமுழுக்கு மூன்று, ஐந்து, ஏழு, ஒன்பது, பன்னிரண்டு, பதினறு, பதினெட்டு, இருபத்தேழு, முப்பத்திரண்டு, முப்பத்தியாறு, நாற்பத்தெட்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை குடமுழுக்குச் செய்தால் போதும் என்று மிகத் தெளிவாகப் பதினெண் சித்தர்களின் குடமுழுக்குச் சாத்திறங்கள், சாத்திரங்கள், சாத்தரங்கள், நூல்கள், பூசா விதிகள், கோபுரப்புத்துயிர்ப்பு நூல்கள்......முதலிய 48 வகையான ஏடுகளும் விளக்கமாகக் கூறுகின்றன.

இவையல்லாமல் பல்வேறு வகைப்பட்ட குடமுழுக்மளில் பயன்படுத்துவதற்கென்று வெவ்வேறு வகையான மந்திறங்கள், மந்திரங்கள் மந்தரங்கள், மாந்தரங்கள், மாந்தரீகங்கள், தந்திறங்கள், தந்திரங்கள், தந்தரங்கள், தாந்திரங்கள், தாந்தரீகங்கள், எந்திறங்கள், எந்திரங்கள், எந்தரங்கள் ஏந்தரங்கள் ஏந்திரீகங்கள் சுருதிகள் சூத்திறங்கள் சூத்திரங்கள் சூத்தரங்கள் ஆகமங்கள் ஆரணங்கள் மீமாம்சைகள் நிடதங்கள் கருவாக்குகள் கருவாசகங்கள் குருவாக்குகள் குருவாசகங்கள தருவாக்குகள் தருவாசகங்கள் திருவாக்குகள் திருவாசகங்கள், அருள்வாக்குகள், அருள்வாசகங்கள், மருள்வாக்குகள், மருள்வாசகங்கள் நான்மறைகள் நான்முறைகள் நானெறிகள் நான்வேதங்கள் நவநாதங்கள பதினெண் சித்தங்கள் நாற்பத்தெட்டுப் பேதங்கள் தொன்னூற்ருறு ஓதங்கள்......என்று எண்ணற்ற அருளுலக அறிவியல் ஞானங்களை (Divine Science) பதினெண் சித்தர்கள் பைந்தமிழில் இன்றைக்கு (1984) 43, 73, 085 ஆண்டுகளுக்கு முன்னல் இளமுறியாக்கண்டம் எனப்படும் (The Last Lemuria) கடலுள் மறைந்த குமரிக்கண்டத்தில் இம்மண்ணுலகின் முதல் மனிதர்களான தமிழர்களுக்கு வழங்கித்தான் இந்துமதத்தைப் படைத்தார்கள் என்ற பேருண்மையைப் பொறுப்போடும் பொறுமையோடும் தெரிவித்துக்கொள்கிறோம்.

இனியாவது வடஆரிய சம்சுக்கிருத வேதநெறியின் அண்டப் புளுகுகளுக்கும் ஆபாசக் கற்பனைகளுக்கும் சூழ்ச்சி மிகு சுரண்டல்காரச் சாத்திறச் சம்பிறதாயச் சடங்குகளுக்கும் மூடப் பழக்க வழக்கங்களுக்கும் கூட்டுமிராண்டித்தானமான பயனற்றபழக்க வழக்கங்களுக்கும் கண் மூடித்தனமான நம்பிக்கைகளுக்கும் பொருளற்ற பயனற்ற பூசை முறைகளுக்கும்...... அடிமையாகி யாரும் பதினெண் சித்தர்கள் படைத்த பகுத்தறிவு மிக்க சமூக விஞ்ஞானமான (The Hinduism is a Rationalistic Social Science) இந்துமதத்தைச் சரியாகப் புரிந்துகொள்ளாமல் தவருனகருத்துக்களை வெளியிட வேண்டாமென்று கேட்டுக் கொள்கிறோம்.

—முற்றும்

தொகுத்தவர்: ஏ. இரவி

# அன்புள்ள சேவுக!

அன்புச் சேவுக!

உரிமையை நிலைநாட்டிட ஆயுதங்களைத் தாங்கி புறப்படுகிறவன்; எண்ணற்ரோர் உயிருக்கு முடிவையும், உடலுக்கு மாரு வடுவுடைய விழுப்புண்களையும் நல்கு-வதோடு வெற்றித் திருமகள் அளித்திடும் வீரப்புண்கள் எனும் முத்திரைகளைப் பெற்றுத் தன்னை வீரலாற்று மாளிகைக்குள் நுழையும் உரிமை பெற்றவனுக்கிக்கொள்கின்ருன்.

இறவாத தத்துவங்களை ஈன்றெடுப்-பேன், உலகம்மறவாத அறிவுலக வரலாறு எழுதுவேன. வருங்காலம் என்-றென்றும் கண்டுகளிக்கக் கருத்து வளர்ச்சி மிக்க கலைக் கருவூலம் அமைப்பேன். மேலும், தாழ்த்தப் பட்டவர்களை உயர்த்துவேன், விழ்த்தப்பட்டவர்களை எழுச்சி பெறச் செய்வேன், மூடி மறைக்கப் பட்ட பேருண்மைகளைத்தேடி கண்டுபிடித்து வெளிக் கொணருவேன், கோழையை வீரனுக்குவேன், எங்கும் எதிலும் இருள் படியாப் பேரொளியை ஏற்றி வைப்பேன், 'கண்டவர் விண்டார்' என்ற புதுப் பெரு-மையைப் படைப்பேன், 'கடைவிரித்தேன் நல்ல வியாபாரம் நடந்தது' என்ற அடைய முடியா பெருநிலையை அடைவேன்; என் மொழி, என் இனம், என் நாடு, என்பவை எனது மூன்று நாடித் துடிப்பு, நான் எடுக்கும் முயற்சிகளும் பிறர் தடுக்கும் முயற்சி-களும் வீரவரலாற்றின் படிக்கட்டுகள்...... என்று சூளுரைத்து வாளின்றி வேலின்றிப் போர் புரியப் புறப்பட்டவன் நெஞ்சமும், சிந்தையும், எண்ணற்ற வீரப்புண்களைப் பெற்று வடுக்கள் மிகுந்த திருவுருவைத் தான் பெற்றிடமுடியும்.

கண்ணுக்கு விருந்தாகாது வீர உடல்; கருத்துக்கும் நாட்டு நல் வாழ்வுக்கும் விருந்தாகுதலே வீரவுடல். நெடிய, பெரிய பயணங்கள், கடுமையும் கொடுமையும் நிறைந்த அநுபவங்கள் கடந்தகாலம் இருளும், இன்னலும், இழப்பும், இழிவும், அழிவும், பழியும், வெடிப்பும், நொடிப்பும் மிக்கவை. நாற்றமடிக்கும் குப்பையால் நறுமணமிக்க மலர்களையும், சுவைமிக்க கனிகளையும் பெறலாம் மண்வாகுக்கேற்-பவே பயிர் செய்யலாம்.

அன்பு,
ஞாலகுரு சித்தர் கருவூரார்

அருள்மிகு வீரமாகாளி சன்னிதானம் பரமாச்சாரியார் அவர்கள் குருவைத் தேடி யலைந்தபோது, மதுரை மாவட்டம் மேலூர் வட்டம் கருங்காலக்குடி உயர்நிலைப்பள்ளியில் 'சமயமும் விஞ்ஞானமும்' என்ற தலைப்பில் குருதேவர் உரையாற்றியதற்கு பின்னால் ஈர்க்கப்பட்டு குருதேவருக்கு கடிதம் எழுதினர் அதற்கு பதிலாக 29—4—1973 அன்று குருதேவர் முதன் முதலில் எழுதிய கடிதத்தின் நகலையே வெளியிட்டுள்ளோம்.

---

## இறைச்சியும் — இறைமையும் (இறைச்சிக் கடை — கசாப்புக்கடை)

பதினெண் சித்தர்களின் உண்மையான இந்துமதப்படி, வழிபாடு செய்யும்போது அல்லது மற்ற சமயங்களில் பலிகொடுக்கும்போது பலியிடுவதற்கு முன்னதாக 'அனைத்தும் உயிருற்று மகிழட்டும்' என்ற வாசகத்தை கூறி பலிகொடுத்தல் (வியாபாரத்திற்கு அறுத்தல்) வேண்டும்

இப்படிக் கூறுவதன் மூலம் அவ்வுயிரைப் புனிதத்தன்மை அடையச்செய்வதோடு அதாவது அவ்வுயிருக்கு நாம் மறு பிறப்பு எடுக்க வழிவகை செய்வதோடு நாமும் நம்முடைய வாழ்வின் பயனை அடையலாம்; வாழ்வின் பொருளைப்புரியலாம்

நம்முடைய மறு பிறவிகளில் நாம் வளமான-செழிப்பான குடும்பத்தில் பிறந்து மகிழ்வுடன் வாழலாம். எனவே இ. ம இ.; அ. வி. தி.;......முதலியவற்றைச் சேர்ந்த - சார்ந்த அனைவரும் உடனடியாக முழுநேர அல்லது பகுதிநேர வேலையாக அவரவர் ஊரில் 'இறைச்சிக்கடை' (கசாப்புக்கடை) துவங்கிப் பயனடைக.

—குருபாரம்பரிய வாசகம்

# குருதேவரின் - பிறந்த நாள் செய்தி

தமிழின மறுமலர்ச்சியைத் திராவிட இன மறுமலர்ச்சியாக்கி, திராவிட இன மறுமலர்ச்சியை இந்திய மறுமலர்ச்சியாக்கி, இந்திய மறுமலர்ச்சியை இம்மண்ணுலக மறுமலர்ச்சியாக்கிடத் துடிக்கும், விரும்பும் 'இந்து மதத்தந்தை நமது குருதேவர்' அவர்களின் 49வது பிறந்த நன்னாளின் மேற்குறித்த கொள்கைகள், குறிக்கோள்கள், செயல் திட்டங்கள் யாவும் நிறைவேற்றுவோம்-என உறுதி பூண்டார்கள் எங்கள் வட்டார அடியான்கள்-

அருள்மிகு கபாலீசுவரி சன்னிதானம், வேம்படிதாளம். (சேலம்)

---

## கவிமழை:

அம்மணமாய் சம்மணமிட்டு
அருந்தவம் நீ செய்தாலும்
உம்மனமானது ஒன்றுபட்டால்தான்
உனக்குரிய வரம் கிடைக்கும்
எம்மதமும் சம்மதமென்று
எழுச்சி பெற உரைத்தாலும்
நம்மனம் ஒன்றுபட்டால்தான்
நமக்குரிய தரம் கிடைக்கும்

அரிவின் நிலையை அறியுமுன்னே
அறிவின் நிலையை அறிந்து கொள்
எரிமலையின் குழம்பைக் கொண்டு
எளிமையான உணவை உன்!
குறிபார்த்து வேட்டையாட
குருட்டினத்தால் முடியாதாம்
தெரியாத சிவமயம்புரிய
தெளிவான சிந்தைவேண்டும்.

-கவிமேகம் இல. கு. கணேசன்

---

## பருவப் பூசை நாட்கள்:

அருள்மிகு வீரமாகாளி சன்னிதானத்தில் அடுத்து வரும் மாதங்களில் கொண்டாடப்படும் பருவப் பூசை நாட்கள் விவரம். மற்றைய அ. வி. தி. நிலையத்தினர் இந்நாளிலோ முன்போ, பின்போ வைத்துக் கொள்ளலாம்.

குருதியாட்சி ஆண்டு,

ஐப்பசி மாதம் 22-ந் தேதி 7—11—84 புதன்கிழமை
கார்த்திகை மாதம் 21ந் தேதி 6—12—84 வியாழக்கிழமை
மார்கழி மாதம் 21-ந் தேதி 5—1—85 சனிக்கிழமை
தை மாதம் 22-ந் தேதி 4—2—85 திங்கட்கிழமை
மாசி மாதம் 22-ந் தேதி 5—3—85 செவ்வாய்க்கிழமை
பங்குனி மாதம் 21-ந் தேதி 3—4—85 புதன்கிழமை

குறிப்புகளை நல்கியவர். அருள்மிகு பரமாச்சாரியார்.

---

## கவனிக்க;

சிந்தனைக்கும், ஆராய்ச்சிக்கும், கருத்து வளர்ச்சிக்கும் உரிய விதத்திலே அமைந்துள்ள **பிள்ளையார் = விநாயகர் கணபதி** என்னும் பொருளாழமிக்கக் கட்டுரை அடுத்த அறிக்கையில் வெளிவரவுள்ளது. படிக்கத் தவறாதீர்கள்.

---

ஞாலகுரு சித்தர் கருவூரர் அவர்களின் கோப்புக்களிலிருந்து இவ்வறிக்கையைத் தொகுத்து அளித்தவர்: சி. கவிக்குமார் பொன்னேரி.

## ‘தன்வந்திரி’ தரும் பாரதக் காட்சிகள்

(தொடர்ச்சி 2-ம் பக்கம்)

பார்+அதம்=இம்மண்ணில் ஏற்பட்ட மிகப்பெரிய அழிவு அல்லது இழப்பு (The Greatest destruction or loss on this Earth) —பாரதம் என்று இம்மண்ணுலகில் அநாதிக்காலம், கிரேதாயுகம், திரேதாயுகம் எனும் மூன்று பெரும் காலங்களிலும் நிகழாத பேரழிவு பேரிழப்புத் துவாபர யுகத்தில் குரு குலத்தார்களுக் கிடையில் நிகழ்ந்த போரில் நிகழ்ந்தது. அதாவது, **இரு திறத்தாரும் பாண்டவர் — கௌரவர்** அழிந்தனர். இதுதான் பாரதப்போரின் குறிப்பிடத்தக்க பேரழிவு, பேரிழப்பு.

குருகுலத்தாரைச் சேர்ந்தோரும் சேர்ந்து தங்களது திறமைகளையெல்லாம் வெளிக்காட்டி தங்களையே அழித்துக் கொண்ட போர் குருகுலத்தார்+சேர்ந்தோர் —> திறமை முழுவதும் பயன்பட்ட போர் **குருச்சேத்திறப் போர்** என்று பெயர் பெற்றது. குருகுலத்தவரும், அவர்களைச் சேர்ந்தவர்களும் தங்களின் திறமையனைத்தையும் வெளிக் காட்டிய இடம் **‘குருச்சேத்திறம்’ குருகுலத்தோரும் அவர்களைச் சேர்ந்தோரும் திறம் காட்டிய** இடம் என்று நிலையானப் புகழ்ப் பெற்றது.

பதினெட்டுக்கோடி அக்ரோன சேனை அழிந்த போர் பாரதம். இப்பெரிய அழிவு கடந்த இரண்டு உலகப்போரில்கூட நிகழவில்லை என்பது குறிப்பிடத் தக்கது. பல வாயிரம் கோடி மனிதர்களைப் பலியாக்கிய போர், பார்+அதம் —> பாரதம்= இம் மண்ணுலகில் மனித இனம் பெற்றிட்ட மிகப் பெரிய அழிவு.

‘தன்வந்திரி’—இவர் குருகுலத்தாரின் உடல் நலம்பேணிய **‘சித்தர் மருத்துவக் கலைஞர்’** இவர் பதினெண் சித்தர்களில் கருவூரரின் வழிவந்தவர். தன்வந்திரி, தன்மந்திரி, தனமாந்திரி...... என்று பல பெயர்கள் சித்தர்களின் மருத்துவ நூல் களில், குருபாரம்பரியத்தில், அரச பாரம் பரியத்தில், போர்க்கலை நூல்களில், வர்ம சாத்திற நூல்களில்... காணப்படுகின்றன.

‘திரி’ - என முடியும் பெயரில் உள்ளவர்கள் விளக்கில் சுடர் விட்டு ஒளி வழங்கும் ‘திரி’ போன்று அருளுலகில் சாதனை நிலைகளைப் பெற்றுவிட்ட பெரியவர்களே.

**தன்வந்திரி—பாரதகாலத்தில் நாடறிந்த புகழ்பெற்ற அரசாங்கத் தலைமை மருத்துவராக இருந்தார். இவர் அவ்வப் போது தம் வாழ்நாள் முழுவதும் பலருக்கும் அறிவுரை கூறியிருக்கின்றார். அதாவது பாரதத்துக்குத் தொடர்பான கண்ணன் வாழ்க்கையை மையமாகக் கொண்டு தன் வாழ்நாள் முழுவதும் இன்றைக்கு வாழ்க்கைக் குறிப்பேடு (Diary) எழுதுவதுபோல் தனவந்திரி பாரதகாலச் செய்திகளை எழுதிக் குவித்துள்ளார். இவற்றை குருபாரம்பரியம் தொகுத்துக்காட்டுகின்றது.**

தன்வந்திரி குறைந்தது 300 ஆண்டு காலத்துக்கு மேலாக வாழ்ந்திருக்க வேண் -டும். கண்ணனின் தாத்தா பாட்டன் முதலியவர்கள் பற்றிய செய்திகளிலிருந்து பாரதப்போர், பாரதப் போரின் முடிவு, பஞ்சப்பாண்டவர்களின் முடிவு... முதலிய பல செய்திகளை **மிகமிகத்தெளிவாக தனது** குறிப்புக்களில் குறிக்கின்றார்.

**கண்ணன்** ஏழுவயதாக இருக்கும் பொழுதே பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம் பெண் என்னும் ஏழு பருவத்துப்பெண்களுடனும் **அங்கவியல்படியும், காமச் சூத்திறப் படியும். காமச்சாத்திறப்படியும், காம நூல் களின் படியும், உறுப்பிலக்கணப்படியும், மோக போகக் கலைகளின் படியும்........ எந்தவிதக் குறைபாடுமின்றி ‘ஏந்தரீக, தாந்தரீக, மாந்தரீகப் பூசைகளைச்** செய்தான் அனைத்து விதமான பத்தி, சத்தி, சித்தி, முத்தி நிலைகளும், சித்து விளையாடல் நிலைகளும் கைவரப் பெற்றான் இவற்றின் பிறகே பன்னிரண்டாவது வயதில் கம்சனைக் கொன்றான்.

தொடரும்-

இராமதேவர், கண்ணதேவர்வரலாறுகளும் வாழ்ந்த இடங்களும் வாழ்க்கைத் தொடர்புடையவர் பெயர்களும்......உச்சரித்தவுடன் ஓதியவுடன் அருளை மழையாகப் பொழியக் கூடியவை.

இதற்காகவே கம்பர்களையும், பெருந்தேவனார்களையும், தேடிப் பிடித்து அவரவர் கல்வி, கேள்வி, அடைவு, துய்ப்பு, தவம், சுற்றம், பயணம்.........முதலியவைகளுக் கேற்பப் பழகு தமிழில் அழகான இலக்கியங்களை எழுதச் சொல்கிறோம் யாம். இந்த இருபத்தேழு வகைப்பட்ட இலக்கியங்களும் தமிழர்களிடையே இராமதேவர், கண்ணதேவர் காதையை வாசிப்பதும், ஓதுவதும், பாடுவதும், கூத்தாடுவதும், நாடகமாக்குவதும்......... தொடர்ந்து நிகழச் செய்ய வேண்டும். இராமனையும், கண்ணனையும் வட ஆரியராக எண்ணச் செய்ததின் மூலம் தமிழினத்துக்கும், இராமனுக்கும் கண்ணனுக்கும் உள்ள தொடர்பை அறுத்தெரிந்த வட ஆரியர் சூழ்ச்சி உடனடியாக முறியடிக்கப்பட்டேயாக வேண்டும். எமது முயற்சிகளை இன்னும் தமிழர்கள் புரிந்து கொள்ளவில்லை. தமிழ்ச் சங்க அழிவு, தமிழ்ச்சங்கப் புலவர்கள் கொலை, சங்க இலக்கிய எரிப்பு...... முதலியவை மூலம் ஆரியர்மாபெரும் வெற்றிபெற்றுவிட்டனர். இந்த நிலையில் எமது "இராமகாதை, கண்ணன் காதை மறுமலர்ச்சியடைந்தால் தான் தமிழர்களுக்கு வருங்காலமுண்டு"... என்ற கருத்தும் கருத்தினடிப்படையிலான முயற்சியும் என்று? எப்போது? எப்படி? வெற்றி பெறுமோ? தெரியவில்லை......

தமிழர்கள் தங்களின் முன்னோர்களையும் மூதாதையர்களையும் புரிந்தால்தான் தன்மான உணர்வு, தன்னம்பிக்கை உணர்வு, விடுதலையுணர்வு, மொழிப்பற்று, நாட்டுப்பற்று, இனப்பற்று, இன ஒற்றுமை......... முதலியவை முளைக்கும், கிளைக்கும், செழிக்கும், பிழைக்கும், "....இன்றைய நிலையில் விண்ணவர்களையும் அவர் வழியினரையும், வழிவந்த சிவன், முருகன், திருமால், பிறமண், தேவர்கள்...முதலியோர் வரலாறுகளையும், வாசகங்களையும், வாக்குகளையும், மக்களிடையில் பரப்புவதைவிட இம்மண்ணுலகில் தோன்றிய, மானுடராகப் பெருமளவில் செயல்பட்ட சூரிய குல இராமதேவர் காதையும்; திங்கள் குலக் கண்ணதேவர் காதையையும் பரப்புவதே நல்லது இதற்காகவே உகக் கணக்கில் பாரம்பரியமாக இராம காதை கூறிவரும் கம்பர்களில் சிறந்த தேரழுந்தூர்க்கம்பனையும் கண்ணன் காதை கூறிவரும் பெருந் தேவனார்களில் சிறந்த மானுமதுரைப் பெருந்தேவனையும் தேர்ந்தெடுத்து இருகாப்பியங்களைப் பதினெண் சித்தர் நெறி விளக்கும் வண்ணம் பாடிடச் செய்தோம். இதனால் வட ஆரியர் மிகத் திறமையாகப் பெருந்தேவனாரையும் அவரிடமிருந்த பாரதக் காதைப் பற்றிய வாசகங்களும், எம்மால் தயாரிக்கப்பட்ட குறிப்பேடுகளும்......அவர் எழுதிய பாரதக் காதை ஏடுகளும் நன்கு திட்டமிடப் பட்டு அழித் தொழிக்கப்பட்டன. இதேபோல், தேரழுந்தூர் கம்பனை எளிதில் அழிக்க முடியாது என்பதை உணர்ந்த ஒட்டக் கூத்தர்கள் நன்கு திட்டமிட்டுத் தமிழ் மொழிக்கு வருங்கால வாரிசாக இருந்த கம்பரின் மகன் அம்பிகாபதியையும் தமிழக அரசியலுக்கு வருங்கால உயிராக இருந்த உயிர்வாரிசாக இருந்த விசயாலயன் மகள் அமராவதியையும் அழித்தனர். பின்னர் கம்பரைக் கொன்று இராமகாதைப்பற்றிய வாசகங்களையும்; எம்மால் எழுதப்பட்ட வாக்குகள் பற்றிய குறிப்புச் சுவடிகளையும் அழித்தனர்.

இனியாவது, தமிழர்கள் 'இராமதேவர்' 'கண்ணதேவர்' என்ற பெயரை அடிக்கடி கூறுவதுடன் இவர்களுடைய வரலாறுகளையும், வாழ்வியல் தொடர்புடையவர்களையும் நினைத்து நினைத்து அருளை மழையாகப் பெற்று வாழ்வைப் பசுமையாக வைத்துக் கொள்ள வேண்டும்.

—சித்தர் காவிரியாற்றங்கரைக்
கருவூரூரின் வாசகங்கள்

முன்னுரை முற்றும்.

---

**இந்தியத் துணைக் கண்டத்துப் பிரதமர் இந்திராகாந்தியின் மறைவுக்கு உலகெங்குமுள்ள இ. ம. இ. யின் கிளைகளும், இதனுடைய பத்து வகையான அமைப்புக்களும் அவற்றின் கிளைகளும் இரங்கல் தீர்மானம் நிறைவேற்றி உயர்திரு. ராசீவ் காந்திக்கு அனுப்பிவருகின்றன இதன்படி செயல்பட அனைத்து அமைப்புக்களுக்கும் குருவாணை வழங்கப்படுகிறது.**

ஞானாச்சாரியார், குருதேவர், தலைவர், குருமகா சன்னிதானம்
ஞாலகுரு சித்தர் கருவூரார், 12 வது பதினெண் சித்தர் பீடாதிபதி

# கேள்வியும் நானே......! பதிலும் நானே......!

**1 வேதம் — என்ற சொல்லின் விளக்கம் என்ன?**

வேது—பக்குவப்படுத்துதல், பதப்படுத்துதல், செம்மைப்படுத்துதல், அடிபட்ட உடலுக்கு வலியைக் குறைத்து பழையபடி நலப்படுத்துதல், ஒத்தடம் தருதல் (அ) வேது கொடுத்தல்.

கருவறைகளுக்கு வேதித்தப் பொருட்கள் – சமைத்த உணவு – வேதித்தவை.

வேதித்தவைகளை வைப்பதற்கு முன்பும் பின்பும் சித்தம், நாதம், ஓதம், போதம் எனும் நான்கையும் ஓத வேண்டும் என்பதே பூசாவிதி.

வேதங்களைக் கற்றவன் வேதியன் (பண்பட்டவன், கற்றவன்) கருவாலும், குருவாலும், தருவாலும், திருவாலும் உரிய வண்ணம் பக்குவப்படுத்தப்பட்டவனே வேதியன். வேதிக்கப்பட்டவன் சொல்லுவது வேதம்.

மறை : மறைக்கப்பட்டது; முறை : முறைப்படுத்தப்பட்டது; நெறி : செயல் வடிவிலுள்ள செயல் திட்டங்கள்; இதற்கடுத்துவருவதே வேதம்.

**2 கோடிக்கணக்கானக் கடவுள்கள் உண்டா? இல்லை ஒரே கடவுள்தானா?**

கோடிக்கணக்கானக் கடவுள்கள் உண்டு. ஒவ்வொரு கடவுள்களுக்கும் ஒவ்வொரு விதமாகச் சமைத்துப்படையல் போடவேண்டும் என்று பதினெண்சித்தர்கள் வகுத்துள்ளார்கள், ஒவ்வொரு கடவுளுக்கும் தனித்தனியாகப் பூசாவிதிகள், படையல் நூல்கள், படையல் சாத்திறங்கள், கருவறை நூல்கள், பூசை செய்யும் நேரம், பூசையின் பயன் என்றெல்லாம் பகுத்துவைத்துள்ளனர். ஒரே கடவுள் என்று சொல்கின்ற ஆன்மீக வாதிகள் கலைமகள் வழிபாடு, திருமகள் வழிபாடு.........என்று பல தெய்வ வழிபாடுகள் மட்டும் தொடர்ந்து செய்து வருகின்றனர். சித்தர்கள் கணக்கையும், மருத்துவத்தையும், வேதியியலையும்......பகுத்தறிவு அடிப்படையில் உருவாக்கியவர்கள். கடவுள்களை கற்பனையாகப் படைத்திருப்பார்களா?

**3 கண்ணன் [இ] லீலைகள் காமக்களியாட்டமா?**

காமக்களியாட்டங்களல்ல ! கண்ணன், [இ[ லீலையின் தத்துவங்களை 'சிவனும் — பரம்பொருளும்' உணர்வுமயமாக ஒன்றி விளையாடுவதைப் 'பெண்ணும் — ஆணும்' விளையாடிப் பெறும் இன்பங்களின் மூலம் விளக்கினான்.

விரிவானக் கட்டுரைப் பின்னர் வெளிவரும்.

K V S பிரிண்டர்ஸ், 10, தேரடி தெரு, பொன்னேரி.

பேரரசோ உருவாக விடமாட்டார்கள். எனவே ஆரம்பம் முதலே மொழி அறிவும் மிகுந்த மொழியுணர்வும் அளப்பரிய இனப்பற்றும் வீரமிக்க நாட்டுப் பற்றுமுடைய இளைஞர்களை உருவாக்குவதில் கண்ணுங்கருத்துமாக இருக்க வேண்டும். இவர்களைச் சார்ந்துதான் அனைத்துத் திட்டங்களும் செயலாக்கப்படல் வேண்டும். நாட்டிலுள்ள புலவர்களையெல்லாம் இதற்குப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.

3. ஆடல், பாடல், கூத்து, நாடகம் முதலிய கலைகளுக்குரிய கலைஞர்கள் புகழுக்காகவும் பொருளுக்காகவும் எதையும் செய்யும் கூலிமனம் படைத்தவர்களாகத்தான் இருப்பார்கள். சித்தர்களின் அனைத்துவிதமான நூல்களும் சாத்திரங்களும் கலைஞர்கள் அனைவரும் கோழைகளாகவும் அடிமைகளாகவும்தான் இருப்பார்கள் என்று திட்டவட்டமாகக் கூறுகின்றன. எனவே இவர்களை மிகவும் எச்சரிக்கையுடனும் கட்டுப்பாட்டுடனும் பயன்படுத்தித்தான் தமிழினப்பண்பாட்டையும் நாகரீகத்தையும் இன ஒற்றுமையையும் நாட்டுப்பற்றையும் வளர்க்க வேண்டும். எச்சரிக்கை! இக்கலைஞர்களை எப்படியும் பிறர் விலைக்கு வாங்கிவிட முடியும் என்பதால் இவர்களை நம்பி அரசியல் சதுரங்கம் ஆட வேண்டாம். எச்சரிக்கை!

4. தமிழ் நாட்டில் பட்டுக் கடை, வட்டிக் கடை, மிட்டாய்க் கடை முதலி-யவற்றின் மூலம் அன்னியர்கள் மக்களை எளிதில் அடக்கி ஒடுக்கி அடிமைப்படுத்தி வைத்திருக்கிறார்கள். இதற்கு எதிர்ப்பான உணர்வுகளையும் கருத்துக்களையும் மக்களிடையே வளர்த்துக்கொண்டேவரவேண்டும். அந்தந்த வட்டாரத்திற்கேற்ப மக்களை மேற்படி சமுதாய விரோதிகளை எதிர்த்துப் போரிடும்படி செய்து பட்டா-ளத்தைத் துணையாக வழங்கி நிலையான வெற்றியைப் பெறவேண்டும். இதன் மூலம் தமிழ்நாட்டில் அன்னியர்கள் மக்களைப் பிரிவு செய்தும் வேறுபடுத்தியும் சுரண்டியும் வளமாக வாழ்வதற்கு வாய்ப்பு ஏற்படாமல் செய்திடல் வேண்டும்.

5. நல்ல வளமான விளைச்சல் நிலங்களும், காய்கறித் தோட்டங்களும் பழமரத்தோப்புக்களும் ஆங்காங்கே ஒரு சில பெரு நிலக்கிழார்களிடம் மாட்டிக் கொண்டுள்ளன. அவர்கள் அந்தச்சொத்துக்கள் தங்களிடமே இருக்க வேண்டுமென்பதற்காக யார் நாட்டை ஆளவந்தாலும் அவர்களுக்குக் கப்பம் கட்டி வரி செலுத்தி நாட்டிலுள்ள பொதுமக்களனைவரையும் அடிமைகளாக்கி தங்களின் நன்றியைச் செலுத்திக் கொள்ளுகிறார்கள் இவர்களால்தான் அன்னியர்கள், அன்னியமொழிகள், அன்னியப்பண்பாடுகள், அன்னியநாகரீகங்கள், அன்னிய ஆட்சிகள் முதலியவைகள் அவ்வப்போது தமிழகத்தில் தோன்றி வாழமுடிகின்றது எனவே இவர்களை நிலையாக ஒழித்து இவர்களிடம் இருப்பனவற்றை பட்டாளத்திலும் படையிலும், சேனையிலும் செயலாற்றும் வீரர்களின் குடும்பங்களுக்குப் பகிர்ந்தளிக்க வேண்டும்.

6. அன்னியர்கள் தமிழினம் என்றென்றைக்கும் ஒற்றுமைப்பட்டு விடாத அளவிற்கு மதப் பிரிவுகளையும், சாதிப் பிரிவுகளையும் இவற்றிற்கிடையே சண்டைச் சச்சரவுகளையும் திறமையாக வளர்த்து விடுகிறார்கள். எனவே அன்னியர்களோ அன்னிய மொழிகளோ கல்வி, கலை, இலக்கியம், மருத்துவம், மதம், வியாபாரம் ......முதலியவற்றின் பெயரால் தமிழகத்தில் மிகப் பெரிய நிறுவனங்களாகச் செல்-வாக்குப் பெற்றிருப்பதை உடைத்தெறிய வேண்டும்; இதற்குரிய தத்துவ விளக்-கங்களை நாடு முழுவதும் பரப்பிய பிறகே செயலில் இறங்கவேண்டும். எச்சரிக்கை.